# தேம்பாவணியில் இயற்கைக் காட்சி

***முனைவர் செ. சாந்தி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6415

***ஆய்வுச் சுருக்கம்***

*பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் காப்பிய உலகிற்குக் கிடைத்த ஒரு புதுமைப் பனுவல் தேம்பாவணியாகும். தேம்பாவணி என்னும் திவ்விய காப்பியம் இத்தாலி நாட்டைச் சார்ந்த வீரமாமுனிவர் என்பவரால் இயற்றப்பட்டது. தமிழன்னையின் வாடா மாலையாகத் திகழும் வகையில் ஒண்பொருள் நிறைந்த ஒப்பற்ற காப்பியம் இது. கிறித்தவ சமயப் போதகராய் மதம் பரப்புவதற்காக வந்த மாமேதையான இவர், தமிழின் மீதும், தமிழின் நீர்மை மீதும் கொண்ட பெரும் பற்றின் காரணமாக ஓர் ஒப்பற்ற காப்பியத்தை நமக்கு நல்கியுள்ளார். குறிப்பாக, திருத்தக்க தேவர் இயற்றிய சீவகசிந்தாமணியை ஒத்த ஒரு காப்பியம் படைக்க வேண்டும் என்பதே அவரின் அவா! ஆகவே, தனது கடின உழைப்பாலும், உறுதியான எண்ணத்தாலும், கவின்மிகு படைப்பாகிய தேம்பாவணியைத் தந்துள்ளார். இன்று, தமிழ்மொழியில் இது காப்பிய வரிசையில் இடம்பிடித்து கலையம்சத்துடன் திகழ்கிறது. ஒரு காப்பியத் தொடக்கத்தில் நாட்டுச் சூழலையே ஒரு இலட்சியச் சூழலாகப் படைத்தல் என்பது தமிழ்க் காப்பிய மரபிற்கே உரியது. இந்நூலில் இயற்கை இன்ப வளம், மழை வளம், மலை வளம், அருவியின் தோற்றம், நாட்டு வளம், நகர்வளம், பற்றி வரும் செய்திகள் ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.*

## முன்னுரை

விவிலியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப் பெற்றது தேம்பாவணிக் காப்பியம். இந்நூல் ஏசு கிறித்துவை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றை வளமுடன் கூறுகின்றது. இக்காப்பியத்தில் வீரமாமுனிவர், தனது மதிநுட்பத்தால் கிறித்தவ சமயக் கொள்கைகள் பலவற்றை ஆங்காங்கே பதிவு செய்துள்ளார். என்றாலும், இக்காப்பியம் இலக்கிய ஆர்வலர்களுக்கு விருந்தூட்டும் வகையில் அமைந்து காலத்தால் நிலைத்து நிற்கிறது. தண்டி ஆசிரியர் குறிப்பிடுகின்ற காப்பிய இலக்கணம் முழுமையும் பின்பற்றப்பட்ட உயர்வான நூலிது. இந்நூலில் நாட்டுப் படலம், நகரப்படலம், இரண்டிலுமே இயற்கைக் காட்சிகளை மிகச் சிறப்பாக வருணித்துக் காட்டியுள்ளார். இக்கட்டுரை வாயிலாக, நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் இயற்கைக் காட்சி களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### தேம்பாவணி ஓர் ஆபரணம்

தேம்பாவணி இன்று தமிழ்த்தாயின் முக்கியமான ஆபரணங்களில் ஒன்றாய்த் திகழ்கிறது என்பதில் அனைவருக்கும் உடன்பாடு உண்டு. இந்நூல் இனிமை நிறைந்த தேன் பாக்களால் ஆனது.

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர் கூட இத்தகு சீரிய காப்பியத்தை தரமுடியுமா என்றால் ஐயமே! அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருட்களை உள்ளடக்கிய காப்பியமாகும். செய்யுள் இலக்கணத்தை முழுமையாகப் பின்பற்றி, ஓசை நயமும், சொல்நயமும், பொருள் நயமும் ஒருங்கே அமைத்து எழுதப்பட்ட காப்பியம் ஆதலின், தமிழ் ஆர்வலர்களுக்கு இன்பத்தேன் பருகிய இன்பம் இயம்பும் உலக அரங்கில் ஒளி வீசும் உணர்ச்சிப் பாக்களால் ஆன உயிர்க்காப்பியம் இதுவென்பதால் காலம் கடந்து வாழும் தன்மையது. முத்தமிழ் முத்துச்சுடரென ஒளி வீசும் உவமை, கற்பனை அணிநலன் யாவும் பின்னிப் பிணைந்து அழகு சேர்க்கும் அரும்பெரும் காப்பியம். முக்கனியின் இன்பம் முழுவதும் கலந்து, கற்பவருக்கு வழங்கும் கனித் தோட்டம் இது.

**“மலை கடல் நாடு வளநகர் பருவம்**
**இருசுடர்த் தோற்றமென்று இனையன**
**புனைந்து”**

என்று தண்டி ஆசிரியர் கூறும் காப்பிய நல் இலக்கணத்தின் அடிப்படையில் அமைந்த அறிவுச்சுடர் ஒளி வீசும் அற்புதக் காப்பியம் இது. இதன்வழி இயற்கை இன்பத்தின் இன்பத்தேன் பருகிட வாரீர்.

### இயற்கை இன்பம்

“இயற்கையைப் பாடாத கவிஞனில்லை இயற்கையைப் பாடாதவன் கவிஞனில்லை” அந்த அளவுக்கு கவிஞர்களுக்கு உயர்ந்த பாடு பொருள் ஆயிற்று இயற்கை. இயற்கையின் அதிசயங்களைக் கண்டு வியந்து, அதன் இன்பங்களைக் கவிதைகளில் வெளிப்படுத்தினர் நம் பண்டையப் புலவர்கள். அதனைத் தொடர்ந்து இன்றளவும் இயற்கையைக் கண்டு இதயத்தைப் பறிகொடுக்கும் எண்ணிலா கவிஞர்களைப் பார்க்கமுடிகிறது.

என்றாலும் காப்பியங்களைப் பொறுத்த மட்டில், நாட்டுவளம், நகர் வளம் போன்றவற்றைக் கூற முற்படும் ஆசிரியர்கள், இயற்கையைப் பாடாமல் தப்பிக்க முடியாது. இயற்கையைப் பாட முற்படும் போதுதான் கவிஞன் கற்பனையோடு கைகோர்க்க முடியும், கற்பனையை அதிகம் கையாண்டால்தான் கவிஞன் உயர்ந்த அங்கீகாரம் பெறமுடியும்! ஆகவேதான், இயற்கையின் ஈர்ப்பில் வயப்பட்ட கவிஞர்கள் வளமான கற்பனைகளை வாரி இறைக்கின்றனர். கற்பனை வளமிக்கக் கவிதையைப் படிக்கும் வாசகர்கள் இன்பத்தை நுகரும் பாக்கியத்தைப் பெறுகின்றனர். மொத்தத்தில் இயற்கை கவிஞனை மட்டுமில்லாமல் வாசகனையும் வசீகரம் செய்கிறது. வீராமாமுனிவரும் நாட்டுப் படலம், நகரப்படலம் பாடுமிடத்து உயர்ந்த கற்பனைக் களஞ்சியத்தைத் தமிழுலகுக்குத் தருகின்றார். நாட்டுப் படலத்தில் வெள்ளம் பற்றிக் கூறும் போது “வெள்ளம் நுரைபோன்றும் நெருப்பைக் கக்குவன போன்றும் பலவகையான இரத்தினங்களையெல்லாம் மலையிலிருந்து அள்ளிக் கொண்டு வருவதாகவும் உவமைப் படுத்துகிறார்.”

### மழைவளம்

**“நீரின்றி அமையாது உலகெனின் யார் யார்க்கும்**
**வானின்று அமையாது ஒழுக்கு”**

***(குறள் 20)***

என்று வள்ளுவர் கூறுவார். மனிதன் வாழ்வதற்கு தண்ணீர் மிகவும் இன்றியமையாதது. வானம் பொய்த்துவிட்டால் மழைவளம் குன்றி நாடு விளைச்சலைப் பெறாமல் பசியும், பட்டினியாலும் அல்லலுறும். ஆனால், தேம்பாவணியில், சூதேயா நாட்டுவளம் கூற முற்படும்போது, வீரமாமுனிவர் தொடக்கத்திலேயே மழை வளத்தையே மேன்மையுடன் கூறுகின்றார்.

***"தெள்ளுலாம் திணை திரைப்ப உண்டு எழுந்து உயர் பரந்து***
***வள்ளுலாம் கருமதகரி இனமெனத் தோன்ற"***
***(நாட்டுப்படலம் 1 : 3 - 4)***

என்றும்,

***"செறி கருணையோடு உஞற்றிய வள்ளர் கொடையெனச் செழுங்குன்றொரு பயின்தொறும் குளிர"***
***(நா. படலம் 3:2 - 3)***

கூறுமிடங்களில் வீரமாமுனிவரின் இயற்கைக் காட்சி வளம் வானைத் தொடுகிறது. கார் மேகங்கள் கறுத்த போர் யானைகள் போல் காட்சியளித்து, இறுதியில் வள்ளல்களைப் போல் கொடைத்தன்மை கொண்டு எல்லா இடங்களும் குளிரும்படி மழை பொழிந்தது என்றுகூறுகின்றார். இதில், வீரமாமுனிவரின் வாயிலாகக் கற்பனைகளைப் பதிவுசெய்யும் உயர்ந்த அறிவாற்றலும் வெளி ப்படுவதை நாம் அறிகின்றோம்.

மழைவளம் பொய்க்காத காரணத்தால் வயல்கள் விளைந்து அதிக மகசூலைத் தருகின்றது. உழவர்கள் அந்த நெற்கதிர்களை அறுத்துப் போர்களாகக் குவிப்பர். மெய்யொடு கலந்த பொய்யை நீக்கி மெய்யை மட்டும் கொள்வதுபோல் உழவர்கள், வைக்கோலை நீக்கிவிட்டு நெல்லின் ஒரு பகுதியை இரவலர்க்கு ஈந்து மீதமுள்ளவற்றைச் சேர்த்து வைப்பர்.

***"மெய்கலந்த பொய்விலக்கி மெய்கொள்பவர் வினைபோல்***
***வைக லந்தநெல் பகட்டினால் தெளி த்து வைமறுத்துக்***
***கை கலந்து அடுத்து ஏற்குனர்க்கு அளித்தபின், களிற்று***
***துய்கலந்தநெல் உண்ணவும் ஈயவும் தொகுப்பர்"***
***(நா. படலம் 15)***

**மலைவளம்**

மலையின் வளத்தை சிறப்பிக்கும் பொருட்டு ஆசிரியர் வருணனையோடு குறிப்பிட்டுள்ளார். மழைநீரைக் குடித்த மலைகள், நூல்களைக் கற்ற ஆசிரியர், மாணவர் பயனடைய விரித்துரைப்பதுபோல் அருவிகளாக எங்கும் பாயும் என்றும் கற்பனை செய்து,

***"படித்தநூல் அவை பயன்பட விரித்து ரைப் பவர்போல்***
***தடித்தநீல் முகில் தவழ்தலை பொலிந்த பொன் மலையே"***
***(நா. படலம் 4:1-2)***

இவ்வாறு பாடுகின்றார். அருவி வெள்ளமானது புண்ணிலிருந்து நுரையுடன் இரத்தம் எழுமாறு கொன்று கொள்ளையடிக்கும் பகைவரைப் போன்று விளங்கியது என்பதை,

***"ஒன்று ரைத்தெரி உமிழ்ந்தவிர் இனமணி வரன்றித்***
***தென்று ரைத்தெழும் திரைத்திரள் வயின்தொறும் புகுந்து***
***வள்ளு ரைத்தெதிர் வதிந்தெலாம் சாய்த்தவை கொடுப்போய்ப்***
***புண்நு ரைத்தடக் கொள்ளைசெய் பொருநதலர் போன்றே"***
***(தேம் : 1:19)***

என்ற பாடலில் கூறுகிறார்.

**கனியும் கற்பனையும்**

தேம்பாவணியில் நாட்டுப் படலத்தை அமைத்து அதில் முழுவதும் நாட்டின் வளத்தை வருணித்துள்ளார் ஆசிரியர். யூதேய நாட்டில் இயற்கையான மரங்கள் கனிகளைக் காய்த்து அழகு நிறைந்துக் காணப்படும். இதனை வீரமாமுனிவர், தமக்கு உயிரளித்த நீரை வணங்குவதுபோல் கனிகள் நிறைந்த கிளைகள் மரத்தின் அடியை நோக்கி வளையும் என்று கற்பனை நயம்படக் கூறுகின்றார்.

***"மிடியில் ஆர்நயன் விளைவில் மாற்றுவான்***
***முடியில் ஆர்கணிப் பொறை, பொறா, முயன்று***
***அடியில் ஆருயிர் அமைந்த நீர் தொழ***
***தடியில் ஆர்மரம், வளைதல் காணுமே"***
***(நா. படலம் - 18)***

**எருசலேம் நகர இயற்கை இன்பக் காட்சி**

சூதேய நாட்டின் நகரமாகிய எருசலேமை வருணிக்கும்போது வீரமாமுனிவர் இளங்கோவடிகளை மிஞ்சிவிடுகிறார்.

எருசலேம் நகரின் உயர்ந்த மாளிகைகளில் உள்ள பொற்கம்பங்களின் உச்சியில் கட்டிய கொடிகள் மாதர் மனம்போல அசைந்தாடும் என்றும், மாளிகையின் உச்சியில் கட்டிய கொடிகள் இரவலரை "வருக" என அழைப்பது போலவும் தோன்றும் என்கிறார்.

**"கோது அகன்று அளிக்குவார் அருத்திக் கொள்கைபோல்**
**தீது அகன்ற அருந்திரு நுகரச் சென்மின்" என்று**
**ஏது அகன்ற அணிக்குலத்து இலங்கும் மாடங்கள்**
**மீது அகன்று அசைகொடி விளிப்ப மாறுமே"**
**(நா. படலமம் - 19)**

எருசலேம் நகரில் கட்டட வல்லுநர்கள் பிடித்த நூல் இழை பிசகாமல் ஒரே நேராக எல்லையின்றி நெடுக அமைந்த வீதிகளைக் கொண்டது. வீதிகளில் அமைந்த மாட மாளிகைகளிலெல்லாம் கற்க வேண்டிய நூல்களை பிழையின்றி கற்ற அறிஞர்கள் வாதிட்டு வளர்த்த கல்வியின் மணமே கமழும். மங்கையர் கற்பு நெறி பிறழாது வாழ்வர். மற்றையோர் அரசியல் கலைகளைக் கற்பிக்கும் நூல்களை ஆராய்வர் என நகரச் சிறப்பை திறம்பட விளக்குகிறார்.

**முடிவுரை**

இயற்கைக்காட்சி இன்பத்தை நுகர்வோர் எவரெனினும் வீரமாமுனிவரின் தேம்பாவணியினைப் படிக்காமல் விடுவதில்லை. அந்த அளவுக்கு இயற்கை இன்பம் கற்பனையின் கரம்பிடித்து வலம் வருகின்றது. தேம்பாவணி தேன் பாக்களால் அணிவகுப்பு நடத்தும் அற்புதக் காப்பியம். கிறித்தவ கருத்துக்களுக்கு அப்பால் நின்று, ஓர் அற்புதமான இலக்கியப் படைப்பு என்னும் நிலையில் நின்று கொண்டு தமிழைப் பருகும் அனைவரும் இதன் இன்பத்தில் நனைவர் என்பதே திண்ணம்.

**பயன்பட்ட நூல்கள்**

1. சே. சுந்தரராசன், தேம்பாவணி, முதல் காண்டம், பாரிநிலையம், 2012.
2. பரிமேலழகர்உரை, திருக்குறள், சாரதா பதிப்பகம், 2002.